பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 04 2025 **TUESDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கனடா பிரதமராக திரு மார்க் கார்னே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. எல்லைதாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக கிரீஸ் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை தொடர்பான பெகாசஸ் அறிக்கையை வெளியிட உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

4. வடகிழக்கு சீனாவில் உள்ள உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>

கனடா பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு மார்க் கார்னேவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இருநாடுகளும் ஜனநாயக மாண்புகளை பகிர்ந்து கொள்வதுடன், சட்ட விதிமுறைகளை பின்பற்றுவதில் உறுதியான நிலைப்பாடு கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்தியா – கனடா இடையேயான நல்லுறவு மேலும் வலுப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருநாடுகளும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

எல்லைதாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக கிரீஸ் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **'George Gerapettritis**-வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

பஹல்காமில் அண்மையில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் சம்பவம் குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா – கிரீஸ் நாடுகள் இடையே வலுவான நல்லுறவு உள்ளதாக திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ளும் ஒரு லட்சத்து 22 ஆயிரம் யாத்ரிகர்களுக்கு மத்திய சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஹஜ் யாத்திரையை சிரமமின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இந்த யாத்திரை பாதுகாப்பாகவும், ஆன்மிக நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையிலும் அமைய பிரார்த்திப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தையடுத்து, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு தொடர்பான உயர்நிலை ஆலோசனைக்கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது. பிரதமர் இல்லத்தில் நடைபெறும் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், முப்படைகளின் தளபதி திரு அனில் சௌகான் மற்றும் கடற்படை, விமானப்படை, ராணுவம் ஆகிய படைகளின் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலையடுத்து பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் திரு கவாஜா ஆசிப்-பின் சமூக வலைதளம் முடக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

எல்லைதாண்டிய தீவிரவாதம் குறித்து அவர் தெரிவித்த கருத்துக்களையடுத்து மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

<<<<<<<>>>>>>

மேகாலயாவில் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

மேற்கு **Garo** மாவட்டத்தில் உள்ள **'Tura**-வில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டப்பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்தார்.

மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள் பழங்குடியின மக்களின் வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>

அரசின் கடன் பத்திரங்கள் மீது வங்கிகள் முதலீடு செய்ய ஏதுவாக, வங்கிகளுக்கான ரொக்க கையிருப்பு தொகையை தளர்த்துவதற்கு ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், மே மாதம் 6-ஆம் தேதி முதல், 19-ஆம் தேதிவரை நான்கு கட்டங்களாக வெளியிடப்படும் அரசின் கடன் பத்திரங்கள் மீது முதலீடுகளை மேற்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அரசு கடன் பத்திரங்கள் மீது முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் உருவாகும் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

வங்கிகள் ரொக்க கையிருப்பை பராமரிப்பது, சந்தை நிலவரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ரிசர்வ் வங்கி தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப அவ்வப்போது உரிய முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் மின் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் அம்மாநில அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர் லால் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜெய்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற அவர், அம்மாநில அரசு மின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை தொடர்பான பெகாசஸ் அறிக்கையை வெளியிட உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

முக்கிய நபர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டு கேட்கும் வகையில், பெகாசஸ் உளவு பார்க்கும் செயலி பயன்படுத்தப்படுவது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை வெளியிட முடியாது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த வழக்கு விசாரணையின்போது நீதிபதி காண்ட் தலைமையிலான அமர்வு, நாட்டின் பாதுகாப்பு கருதி, உளவு பார்க்கும் செயலிகளை அரசு பயன்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அடுத்தக்கட்ட விசாரணையை வரும் ஜுலை 31-ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

<<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த மகாராஷ்ட்ரா மாநிலத்தை சேர்ந்த குடும்பங்களுக்கு தலா 50 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் அறிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற அம்மாநில அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, இந்த அமைச்சரவைக்கூட்டத்தில், தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கான உதவிகள் வழங்கப்படும் என்று மகாராஷ்ட்ரா அரசு அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் வசூலிக்கப்படும் கட்டணங்களை ஒழுங்குப்படுத்துவதற்கான வரைவு மசோதாவிற்கு தில்லி அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

பள்ளிகளில் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்படுவது குறித்து விரிவான வரை மசோதாவை அரசு உருவாக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி தில்லியில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளிலும் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கான முழுமையான வழிகாட்டுதல் நடைமுறைகள் இந்த வரைவு மசோதாவில் இடம்பெற்றுள்ளதாக திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

வடகிழக்கு சீனாவில் உள்ள உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

**Liaoyang** நகரில் குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதியில் உள்ள இந்த உணவகத்தில் இன்று பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற தீ விபத்துகள் நிகழாமல் தடுப்பதற்கான வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அந்நாட்டு அதிபர் திரு ஜி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உயர் சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன.

தீ விபத்துக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் இதுகுறித்து முழு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>

ஒடிஷா, மேற்குவங்கம், ஜார்கண்ட், ஆகிய மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தென்மேற்கு ராஜஸ்தான் மற்றும் மேற்கு இமயமலையையொட்டிய பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் வெப்ப அலை வீசக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது

தில்லியில் நடைபெறும் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-----------

கொழும்புவில் நடைபெற்ற முத்தரப்பு மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 276 ரன் எடுத்தது.

277 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய தென்னாப்பிரிக்கா அணி 49 புள்ளி இரண்டு ஓவரில் 261 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக, இந்தியாவின் பிரதிகா ராவல் 78 ரன் எடுத்தார்.

<<<<<<<>>>>>>